4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 284/2023 நாள்: 24.03.2026 வா.சா.2 – பாலகுமார்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

1. நான் பட்டயப்படிப்பு படித்துள்ளேன், எனது மனைவி 12ம் வகுப்பு வரை படித்துள்ளார். நான் 2005 ம் ஆண்டு முதல் 2025 ம் ஆண்டு வரை தொழில் செய்து வந்தேன். நான் ஒரே தொழிலை தான் செய்து வந்தேன். நான் Shri Sivesh Engineering என்ற நிறுவனத்தை நான் உரிமையாளர் என்ற முறையில் நடத்தி வந்தேன். நான் எனக்காக எனது மாமனார் கிரைய உடன்படிக்கை மற்றும் கிரைய ஆவணத்தை பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தார் என்று நான் முதல் விசாரணையில் கூறியிருப்பதால், நான் எனது மாமனார் வழக்கறிஞரை பார்த்து வழக்கு விவரங்களை நான் சொன்னேனா என்றால் சொன்னேன் என்று சாட்சி கூறுகிறார். கடனுக்காக தான் கிரைய ஆவணமும், கிரைய உடன்படிக்கை ஆவணமும் எனது மாமனார் எழுதி கொடுத்ததாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், கடனுக்கான வட்டி விகிதம் பற்றி என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. எனது மாமனார் எழுதி கொடுத்த வா.சா.ஆ.2 ஆன கிரைய ஆவணம் செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டும் என்று எனது மாமனார் இந்த வழக்கில் பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் நானும், எனது மனைவியும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது மாமனாரை இன்னார் என்று சார் பதிவாளருக்கு அடையாளம் காட்டியது நானும், எனது மனைவியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தை நானும், எனது மனைவியும் படித்து பார்த்தோம்.

கடனுக்காக தான் மேற்படி ஆவணம் எழுதப்பட்டது என்று வாசகம் எதுவும் வா.சா.ஆ.2 ல் இல்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆன கிரைய ஆவணத்தில் கிரைய தொகை ரூ.30 லட்சம் என்று பேசப்பட்டு அதில் ஏற்கனவே ரூ.20 லட்சம் என்னுடைய வியாபார அபிவிருத்திக்காக பல தவணையில் ரொக்கமாக பெற்று கொண்டதாகவும், மீதி ரூ.10 லட்சத்தை காசோலையாக எனது மாமனார் பெற்று கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறு.

3. சார் பதிவாளர் மேற்படி ஆவணத்தை பதிவு செய்யும் போது கிரைய தொகை பெற்றுக்கொண்டதாக தான் எனது மாமனார் மற்றும் நான் தெரிவித்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் எனது மாமனார் பெயரில் உள்ள கூட்டு பட்டா மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ் ஆகியவற்றை இணைத்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக பிரதிவாதி பெயருக்கு பட்டா, சிட்டா, கிஸ்து ஆகியவை மாற்றப்பட்டுவிட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் கம்பி வேலி அமைத்து அதில் பிரதிவாதி ஒரு செட்டும் அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி கிரையத்திற்காக ரூ.10 லட்சம் மட்டும் தான் காசோலை மூலமாக எனது மாமனாருக்கு கொடுத்துள்ளார் என்றும், மீத தொகையை கேட்ட போது பிரதிவாதி பின்னால் தருவதாக சொல்லிவிட்டு, தற்போது வரை பிரதிவாதி தரவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி பிரதிவாதி தராததாக சொல்லும் தொகையை கேட்டு 2019 ம் ஆண்டு வரை நாங்கள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை மற்றும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடன் வாங்கியதாக சொல்லப்படும் தொகையை 2019 டிசம்பர் மாதம் திரும்ப செலுத்தியதாக சொல்லியுள்ளேன், எந்த தேதியில் திரும்ப செலுத்தினேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். 24.12.2018 ல் எனது மாமனார் மீதமுள்ள 4 ஏக்கர் பூமியை

பொறுத்து பிரதிவாதிக்கு ஒரு பதிவு கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்தார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அவை கடனுக்காக ஏற்படுத்தப்பட்டவையாகும். மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் ரூ.40 லட்சம் கிரைய தொகையாக பேசப்பட்டு அதில் ரூ.30 லட்சம் காசோலையாக முன்தொகையாக எனது மாமனார் பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள மீத தொகை ரூ.10 லட்சத்தை பிரதிவாதியிடமிருந்து எனது மாமனார் பெற்றுக்கொள்ளாமலும், கிரையம் செய்து கொடுக்காததததாலும், பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்க தயாராகவும், விருப்பத்துடனும் இருந்தார் என்றும், எனது மாமனார் கிரையம் செய்து கொடுக்க முன்வராததால் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.33/2023 என்ற வழக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், அது கடனுக்காக எழுதப்பட்டது என்று சாட்சி கூறுகிறார். பிரதிவாதிக்கு வாங்கியதாக சொல்லப்படும் கடனுக்கு எனது வங்கி கணக்கு மூலமாகவும், எனது மனைவி வங்கி கணக்கு மூலமாகவும், எனது நிறுவன வங்கி கணக்கு மூலமாகவும் வட்டியாக மாதம் ரூ.1,40,000 செலுத்தினேன் என்பதை காட்டுவதற்கு வங்கி ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சி தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறார்.

6. நான் சொல்வது போல் வட்டிக்காக வங்கி கணக்கு ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை, பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.1,40,000 வட்டியாக மாதம் பிரதிவாதிக்கு நான் செலுத்தினேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி தற்போது வரை எனக்கு எதிராகவோ, எனது மாமனாருக்கு எதிராகவோ, எனது மனைவிக்கு எதிராகவோ காசோலை வழக்கோ, கடனுறுதி சீட்டின் அடிப்படையில் வழக்கோ பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் என்னிடமோ, எனது மாமனாரிடமோ, எனது மனைவியிடமோ பிரதிவாதி ஒரு போதும் நிரப்பப்படாத காசோலையோ, நிரப்பப்படாத கடனுறுதி சீட்டோ பெறவில்லை

என்றால் சரியல்ல. 24.12.2018 ல் அன்றைய தினம் தாவா சொத்திற்கு என்ன மதிப்போ அதை கொடுத்து தான் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி 24.12.2018 அன்று தாவா சொத்தின் சந்தை மதிப்பு எவ்வளவு என்ற விவரத்தை என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை, அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. 29.04.2019 அன்று பிரதிவாதி நிறுவனத்திடமிருந்து நான் தனிபட்ட முறையில் ரூ.5 லட்சம் காசோலை மூலமாக கடனாக பெற்றுள்ளேன் என்றும், அது 30.04.2019 அன்று வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு காசோலை தொகையை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 29.04.2019 தேதியிட்ட என்னுடைய வங்கி கணக்கு ஆவணங்களை தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேன். மேற்படி ரூ.5 லட்சம் கடனை திருப்பி செலுத்துவதற்கு வட்டியுடன் சேர்த்து மொத்தம் ரூ.5,70,000 பல்வேறு தேதிகளில் திரும்ப என்னுடைய வங்கி கணக்கு, எனது மனைவி வங்கி கணக்கு, எனது நிறுவன கணக்கு ஆகியவற்றின் மூலமாக செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 2018 க்கு பின்பு நான் கடனே பிரதிவாதியிடம் வாங்கவே இல்லை என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. கடனுக்காக தான் கிரைய ஆவணமும், கிரைய ஒப்பந்தமும் எழுதிகொடுத்தோம் என்றும், அதை ரத்து செய்து தரவேண்டும் என்றும் பிரதிவாதிக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். கடனுக்காக தான் ஆவணங்களை எழுதி கொடுத்தது பொய் என்ற காரணத்தினால் தான் நானும், எனது மாமனாரும் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ஆவணமான வங்கி கணக்கு புத்தகத்தில் சில பகுதிகளை மறைப்பதற்காக பின் அடித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் என் பெயரிலுள்ள வங்கி கணக்கு புத்தகத்தையும் சில பகுதிகளை மறைத்து பின் அடித்து தாக்கல் செய்துள்ளேன்

என்றால் மறைப்பதற்காக பின் அடிக்கவில்லை, தேவையில்லை என்பதால் பின் அடித்துள்ளேன் என்று சாட்சி கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள எனது நிறுவன கணக்கு பட்டியலான வா.சா.ஆ.6 ல் நான் ரூ.1,40,000/– வட்டி செலுத்தினேன் என்பது சம்பந்தமாக குறிப்புகள் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எனது வங்கி கணக்கு பட்டியலில் ஒரு முறை தான் ரூ.1,40,000 பிரதிவாதிக்கு செலுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது, மாத மாதம் செலுத்தியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது மனைவியின் வங்கி கணக்கு புத்தகத்தில் இரண்டு மாதங்கள் மட்டும் பிரதிவாதிக்கு ரூ.1,40,000/– செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது, மாத மாதம் செலுத்தியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் வட்டியாக வாங்கியதாக சொல்லும் கடனுக்கு மாத மாதம் ரூ.1,40,000 பிரதிவாதிக்கு செலுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

9. எனது மாமனார் பிரதிவாதிக்கு 24.12.2018 அன்று எழுதிக்கொடுத்த கிரைய ஒப்பந்தத்தின் நகலை இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது மாமனாரை தூண்டி விட்டு பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் பொய்யானது என்று தெரிவித்து இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 13.04.2023 ல் எனது மாமனார் ஆன்லைன் மூலமாக பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுத்ததாக வா.சா.ஆ.7 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். அது இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக பொய்யாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 13.04.2023 ல் மேற்படி புகாரை தாக்கல் செய்வதற்கு முன்பாக இந்த வழக்கை எனது மாமனார் தாக்கல் செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.7 ஆவணத்தில் ஏற்கனவே தாவா தாக்கல் செய்யப்பட்ட விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மற்றும் எனது மாமனார் சேர்ந்து தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது மாமனார் சுவாதீனத்தில் உள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவாவில்

கோரியுள்ள அனைத்து பரிகாரங்களும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.24 18:22:20 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.